**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.8**

**தேதி: 12.07.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **மாரிமுத்து** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **கருப்பையா** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **சித்தலூர்** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **55/2023** |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் சித்தலூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் உள்ளது. எனது உடன் பிறந்த மூத்த சகோதரி முத்துராமு ஆவார். அவரை சிங்கமுத்து என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். அவர்களுக்கு 2 ஆண் குழந்தைகளும் 2 பெண் குழந்தைகளும் உள்ளார்கள். எனது அக்காவுக்கு சொந்த ஊர் சித்தலூர். சிவகங்கையில் குடியிருந்து வந்தார்கள். எனது சகோதரியின் சித்தலூர் வீட்டுக்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையே உள்ள சந்துப் பாதை சம்பந்தமாக அவர்களுக்குள் பிரச்சினை இருந்து வந்தது. எனது தாயார் எதிரி பஞ்சவர்ணத்திடம் இது சம்பந்தமாக கேட்டார். எதிரி பஞ்சவர்ணம் எனது தாயார் விளக்குமாற்றால் அடித்துவிட்டார். 31.07.2012ல் காலை 11.00 மணிக்கு எனது அக்கா மகள் ரூபாவின் இறந்த நாள் அன்று நாங்கள் சித்தலூரில் எனது அக்கா வீட்டில் இருந்தோம். சிவகங்கையிலிருந்து எனது அக்கா, வாச்சாரக்காளை, முருகேஸ்வரன், தீபா ஆகியோர்கள் டாடா சுமோ காரில் சித்தலூருக்கு வந்தார்கள். காரில் அக்கா வீட்டிற்கு வந்தார்கள். நாங்கள் அக்கா வீட்டிற்குள் இருந்தோம். சத்தம் கேட்டு நாங்கள் வெளியே ஓடிவந்தோம். மகாதேவன் வேல் கம்புடன் இருந்தார். தேவுடியா வந்துவிட்டாள் வெட்டிக் கொல்லுங்கடா எனச் சொன்னார். பஞ்சவர்ணமும், அழகுமலையும் எனது அக்காவைப் பிடித்துக் கொண்டார்கள். மகாதேவன் வேல் கம்பால் என் அக்காவின் இடது பக்க மார்பில் குத்தினார். தடுக்க வந்த வாச்சாரக்காளையை ராஜ்குமார் கத்தியால் இடதுபக்க விலாவில் குத்திவிட்டார். கம்பால் செல்லதுரை வாச்சாரக்காளையின் இடது பக்க தலையில்

அடித்துவிட்டார். எனதுஅக்காவின் அடுத்த மகன் முருகேஸ்வரன் தடுக்க வந்தார். அதை கத்தியால் ராஜ்குமார் முருகேஸ்வரனை இடதுபக்க விலாவில் குத்திவிட்டார். முத்துப்பாண்டி கம்பால் ராஜ்குமாரை அடித்துவிட்டார். நானும், முத்துக்குமார், முத்துக்கருப்பன், லதா ஆகியோர்கள் ஓடி வந்தோம். எதிரிகள் ஓடிவிட்டார்கள். எனது அக்கா மயங்கி கீழே விழுந்தார். அதே காரில் காயம்பட்ட எனது அக்கா முத்துராமு, வாச்சாரக்காளை, முருகேஸ்வரனை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றோம். அங்கே எனது அக்கா முத்துராமு இறந்துவிட்டதாக சொன்னார்கள். வாச்சாரக்காளையை சிரீயஸ் கண்டிசன் எனச் சொல்லி மதுரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். முருகேஸ்வரனுக்கு அங்கேயே சிகிச்சைக் கொடுத்து சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சித்தலூரில் 1000 வீடுகள் இருக்கும் என்றால் எத்தனை வீடுகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. சித்தலூரில் பிள்ளையார்கோவிலை ஒட்டி இடிந்துக் கிடக்கும் வீடு தான் என் வீடு. ஒரு 5, 6 வருடமாக மராமத்து செய்யாமல் இருக்கிறோம். நான் சென்னையை அடுத்து உள்ள தாம்பரத்தில் வணிக வரித்துறையில் பதிவு செய்து உரிமம் பெற்று நெய் வியாபாரம் செய்து வருகிறேன். 20 வருடங்களாக அவ்வாறு வியாபாரம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வணிக வரித்துறையில் என்னுடைய ஆவணங்களை சரி பார்த்தால் எத்தனை வருடங்களாக தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனது குடும்பத்தாருக்கு வழங்கல் அட்டை தாம்பரம் முகவரியில் உள்ளது என்றால் சரியல்ல. நான் சென்னையில் நெய் வியாபாரம் செய்வது காவல் துறையினருக்கு தெரியும் என்றால் சரிதான். நானும் இறந்த முத்துராமு, சாட்சி முத்துக்குமாரின் தகப்பனார் அயோத்தி ஆகியோர்கள் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். காவல் துறை விசாரிக்கும் போது சம்பவத்தை நேரில் பார்த்தாக நான் முதல் விசாரணையில் சொன்னதைப் போல சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். நான் சொன்ன தேதியில் சொன்னது போல் சித்தலூரில் நான் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ரூபா என்ற பெண் எந்த வருடம் பிறந்தது எந்த வருடம் எந்த தேதியில் இறந்தது என்று தெரியாது என்றால் சரிதான். இந்த இரண்டு குடும்பத்திற்கும் சிவில் நீதிமன்றத்தில் எந்த வழக்கும் கிடையாது என்றால் சரிதான்.

சாட்சி தற்போது ஏற்கனவே புகார் கொடுத்து வழக்கு உள்ளது என்று கூறுகிறார். சித்தலூரில் உள்ள முத்துக்கருப்பன் என்பவர் எனது அக்காவின் மருமகன் ஆவார். சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக முத்துக்கருப்பன், சித்தலூர் பாண்டி மகன் ஐயப்பன், ஆகியோர் சேர்ந்து 1வது எதிரி மகாதேவன் வீட்டை அடித்து உடைத்து மகாதேவனுக்கு காயம் ஏற்படுத்தியதாக சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண்.109/2011ல் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த வழக்கிற்கும் முத்துக்கருப்பனுக்கும் சம்பந்தம் இல்லை. அது ஐயப்பன் சம்பந்தப்பட்ட வழக்கு. அதில் காயம்பட்ட ராஜ்குமார் என்றும் அவர் தான் புகார் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அந்த சம்பவத்திற்கும் எனது அக்கா மருமகனுக்கும் சம்பந்தம் இல்லை. அந்த சம்பவம் குறித்து நான் கேள்விப்பட்டேன். நான் சென்னையில் இருந்ததால் அந்த சம்பவம் குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நபர் தான். நான் வியாபாரம் ஆரம்பித்த தேதியிலிருந்து வணிக வரித்துறையில் பதிவுப் பெற்று தான் தொழில் செய்து வருகிறேன் என்றால் கடந்த 5 வருடங்களாக பதிவு செய்து தொழில் செய்து வருகிறேன். நான் சென்னையை அடுத்த தாம்பரத்தில் குடியிருந்து வருகிறேன். ரெங்கநாதபுரம், 1வது தெரு, மேற்கு தாம்பரம், கதவிலக்கம் 1/5 என்ற முகவரியில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். தாம்பரத்தில் ரெங்கநாதபுரம் 5வது தெருவில் சங்கீதா ஆயில் ஸ்டோர் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். எனக்கு உதவியாக எனது மனைவியும் மக்களும் கடையில் பணி செய்கிறார்கள் என்றால் சரிதான். நான் இறந்து போன எனது மூத்த சகோதரி முத்துராமுவின் சகோதரன் என்பதால் காவல் துறைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சித்தலூரில் நான் சம்பவத்திற்கு முன்போ பின்போ குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.